**திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பு - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்களுக்கும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புச் சட்டத்தின் 11(4) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காட்டப்படுகின்றன. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, கூட்டுத்தாபன நம்பிக்கைப்பொறுப்பின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயாமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப்பொறுப்பு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நம்பிக்கைப்பொறுப்பைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நம்பிக்கைப்பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கைப்பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நம்பிக்கைப்பொறுப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள, புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நம்பிக்கைப்பொறுப்பின ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்.

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்துடன் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமம் 02 இன் பந்தி இலக்கம் 08 மற்றும் 56 இன் பிரகாரம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் கணக்கிடப்பட்ட போது 2020 திசெம்பர் 31 இல் முதிர்வடைவதற்குமான மீதமுள்ள காலம் 03 மாதங்கள் அல்லது | 2021 ஆம் வருடத்திலிருந்து சரியாக குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது நியமத்தின் மற்றும் பதிலின் பிரகாரம் செயற்படுத்தப்படல் வேண்டும். |

அதற்குக் குறைந்த முதலீடுகள் நிதி நிலைமைக் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பணம் மற்றும் பணத்திற்குச் சமனான திரவ சொத்துக்களாக காட்டப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 இல் 3 மாதகாலப்பகுதிக்குள் முதிர்வடைகின்ற கூட்டுத்தொகை ரூபா 5,860,049 பெறுமதியான 03 திறைசேரி உண்டியல்கள் மற்றும் மூன்று மாத நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,000,000 ஆனது பணம் மற்றும் பணத்திற்குச் சமனான திரவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 02 நிதியக் கணக்குகள் தொடர்பான தகவல் | 1,462,778 | நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான எழுத்து மூல உறுதிப்படுத்தல் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நம்பிக்கைப் பொறுப்புச்சபைக்கு நம்பிக்கைப் பொறுப்புச்சபை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியம் நிறுவப்பட்டமைக்கான நோக்கங்கள் தொடர்பாகக் கண்டறிந்து அதன் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (ஆ) | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் | 869,000 | 03 கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த உறுதிச்சீட்டுக்கள் கோவைப்படுத்தப்பட்ட போது காணாமல் போய்விட்டன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சகல உறுதிச் சீட்டுக்களும் உடனடியாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1986 இன் 3 ஆம் இலக் திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புச்சட்டம். | | | |
| (i) | 3(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் | நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடுகளுக்காக நம்பிக்கைப்பொறுப்புச் சபை நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் வருடத்திலிருந்து 2020 திசெம்பர் 31 வரையில் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் வருடத்திலிருந்து நம்பிக்கைப் பொறுப்புச் சபை நியமிக்கப்படாததுடன், 2021 ஆம் வருடத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் செயற்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) | 5 (1) பிரிவு | திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கும் உதவும் விதத்தில் திட்டமிடப்பட்ட நலன்புரி நிதியம், சேமிப்பு நிதியம், சேமிப்பு அல்லது சிக்கனச் சங்கம் மற்றும் ஏனைய சமமான முன்மொழிவுகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | நிதி நெருக்கடிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று இல்லாமையால் இந் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முடியவில்லை. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 5 (2) (அ) பிரிவு | தகுதி வாய்ந்த திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கும் கடன்கள், கொடுப்பனவுகள், வீட்டு வசதிகள் அல்லது பிற ஒத்த சலுகைகளை வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி நெருக்கடிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று இல்லாமையால் இந் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முடியவில்லை. | - மேற்படி - |
| (iv) | 5(2) (ஆ) பிரிவு | திரைப்பட கலைஞர்களுக்கும் மற்றும் திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கும் உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ ஊனமுற்றவர்கள் மற்றும் தங்கள் தொழிலைத் தொடர முடியாத தகுதி வாய்ந்த திரைப்பட தொழில்நுட்பவியலாளர்களுக்கான உதவும் எவ்விதமான நிதி உதவிகளையும் வழங்குவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நெருக்கடிகள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபையொன்று இல்லாமையால் இந் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முடியவில்லை. | - மேற்படி - |
| (v) | 6(2) (அ) பிரிவு | நிதியத்தைப் பயன்படுத்துவதற்காகப் பொருத்தமான செயற்திட்டங்கள் அல்லது செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்புச் சபை இல்லாமையால் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1.5.1 ஆம் பந்தியின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 877(1)(இ) | கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பினால் மீளாய்வாண்டிற்காக வரவு செலவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 877(2)(இ) | கணக்காண்டு முடிவடைந்த 02 மாதங்களுக்குள் சான்றுபடுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 சனவரி 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டதால் 2020 இன் கணக்குகள் தாமதமானது. | - மேற்படி - |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 245 மற்றும் 257 | மீளாய்வாண்டில் 10 உறுதிச் சீட்டுப் பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டு மொத்தம் ரூபா 1,644,200 ஆன செலவுகள் சான்றுபடுத்தப்படாது கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

-----------------

**2.1 நிதி விளைவுகள்**

------------------

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பின் 2020 ஆம் வருடத்திற்கான நிதி விளைவு ரூபா 10,884 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 530,045 ஆகும். அதன் பிரகாரம், நிதி விளைவுகளில் ரூபா 519,161 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகள் ரூபா 310,000 ஆல் அதிகரித்தமை மற்றும் திறைசேரி பெறுவனவுகள் ரூபா 315,000 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.